233

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

ஆணை எண்: 235 /பேரூ/2022
நாள்: 12 .12.2022

திரு. R.சபரிநாதன்,
தேனி மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
தேவதானப்பட்டி பேரூராட்சி,
தேனி மாவட்டம். ... எதிர்மனுதாரர்

தேனி மாவட்டம், தேவதானப்பட்டி, 9, ஜெயமங்கலம் ரோடு ஆசிரியர் காலனியில் வசிக்கும் திரு.R.சபரிநாதன் என்பவரின் 15.09.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.09.2022-ல் பெறப்பட்டு 235/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தேனி மாவட்டம், தேவதானப்பட்டி, 79, ஜெயமங்கலம் ரோடு ஆசிரியர் காலனியில் வசிக்கும் திரு.R.சபரிநாதன் என்பவர் தனது முறையீட்டு மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனக்கு 18வது வார்டு ஆசிரியர் காலனியில் மனையிடம் உள்ளது. எனது இடத்திற்கு வலது புறமாக தேவதானப்பட்டி பேரூராட்சியால் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் வடிகால் பாதையானது சேதமடைந்து எனது நிலத்திற்கு செல்வதுடன் எனது நிலத்திற்கு அப்பால் உள்ள முருகன் கோவிலுக்கு மேற்குப்பக்கம் கழிவு நீர் வடிகால் பாதை அடைக்கப்பட்டு கழிவு நீர் எனது இடத்திற்குள் வருவதால் பாதிக்கப்பட்டுள்ளேன். இது குறித்து கள ஆய்வு செய்து சேதமடைந்துள்ள கழிவுநீர் வடிகால் பாதையை சரிசெய்யுமாறும் மற்றும் அடைப்பட்டுள்ள கழிவுநீர் வடிகால் பாதையை தூர்வாரி முறையான கழிவு நீர் வடிகால் வசதி செய்து தருமாறு தேவதானப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலருக்கு 07.09.2022ம் தேதி மற்றும் 14.09.2022ம் தேதியில் மனு செய்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இது குறித்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்".

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி தேவதானப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 28.11.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 28.11.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 07.12.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.

**மனுதாரர் 07.12.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் பங்கேற்கவில்லை. ஆனால் தனது 7.12.2022 நாளிட்ட அறிக்கையை மின்அஞ்சல் மூலம் இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளார் அதில்:-**

" 07.12.2022 அன்று முறையீட்டு நடுவர் மன்றத்தில் நடைபெறும் விசாரணையில் எனது உடல்நிலை சரியில்லாதது காரணமாக என்னால் நேரிடையாக பங்கேற்கவில்லை. ஆதலால் எனது தரப்பு வாதுரைகளை எழுத்து பூர்வமாக சமர்ப்பிக்கின்றேன்.

தேனி மாவட்டம், தேவதானப்பட்டி பேரூராட்சி 18வது வார்டு, ஆசிரியர் காலனியில் உள்ள கழிவுநீர் வாய்க்கால் மற்றும் வடிகால்கள் போதிய பராமரிப்பு இல்லாததால், நான் எலுமிச்சை செடிகள் பயிரிட்டுள்ள எனது நிலத்திற்குள் கழிவுநீர் செல்வதாகவும் இதனை தடுப்பதற்கும் போதிய பராமரிப்பு வசதிகள் செய்துதர வேண்டி தங்களுக்கு புகார் மனு செய்திருந்தேன்.

இதன்படி தேவதானப்பட்டி பேரூராட்சி நிர்வாகம் சார்பில் கடந்த வாரத்தில் தக்க களஆய்வு மேற்கொண்டு கழிவுநீர் வாய்க்கால்கள் உரிய முறையில் சீரமைக்கப்பட்டு கழிவு நீர் செல்வதற்கு வழிவகை செய்யப்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்பதனை நான் தெரிவித்துக் கொள்வதுடன், நடவடிக்கை மேற்கொண்டதற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்''.

**தேவதானப்பட்டி பேரூராட்சியின் செயல் அலுவலர் 07.12.2022 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார் :**

மனுதாரர் திரு. சபரிநாதன் தனது மனுவில் குறிப்பிட்டிருந்த புகாரையொட்டி மேற்கண்ட கழிவுநீர் வடிகால் பேரூராட்சியால் ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரரின் வீட்டிலிருந்து வெளியேறும் கழிவு நீர் கால்வாய் மூலம் வெளியே சென்றுக் கொண்டிருந்தது. ஆனால் மனுதாரின் பக்கத்து வீட்டில் உள்ளவரிடம் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக மேற்கண்ட வடிகால் செல்லும் பாதை பக்கத்து வீட்டில் உள்ளவரால் அடைக்கப்பட்டு மேற்கண்ட வடிகால்வாய் வழியாக கழிவு நீர் செல்லாமல் தேங்கியிருந்தது. தற்போது மேற்கண்ட கால்வாயின் பாதையிலிருந்து அடைப்பு சரிசெய்யப்பட்டு கழிவு நீர் தங்கு தடையின்றி செல்கிறது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்து, அதற்கான புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் இந்நேர்வு தொடர்பான எனது 6.12.2022 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களை எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக் கொள்கிறேன்.

**தேவதானப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 06.12.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.**

திரு. சபரீசன் த/பெ. வி. ராமையா, டீச்சர் காலனி தேவதானப்பட்டி என்பவர் தான் குடியிருக்கும் பகுதியில் கழிவுநீர் வடிகாலில் தண்ணீர் தேங்கியுள்ளதாகவும் அதனை சரி செய்து தருமாறும் 07.09.2022இல் செயல் அலுவலருக்கு விண்ணபித்திருந்தார். இந்த விண்ணப்பம் ந.க.எண். 538/2022/அ2 என எண்ணிடப்பட்டு பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளரால் 07.09.2022இல் பார்வையிட்டு சரி செய்து அறிக்கை சமர்பிக்க அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் அவர் சம்பந்தப்பட்ட பகுதியில் வடிகால் அடைப்புகளை 08.09.2022ஆம் தேதியில் சுத்தம் செய்து அறிக்கை அனுப்பியுள்ளார் என்றும் இத்தகவல் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. சம்மந்தப்பட்ட பகுதியில் சுமார் 40 மீட்டர் நீளமும், 1/2 மீட்டர் அகலமும் கொண்ட சிறிய அளவிலானை வடிகால் மட்டுமே உள்ளது. அதுவும் 08.09.2022ஆம் தேதியில் சரிசெய்யப்பட்டு உள்ளது. மேலும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் கடிதம் 29.11.2022இல் கிடைக்கப்பெற்றவுடன் சம்பந்தப்பட்ட பகுதி ஆய்வு செய்யப்பட்டது. சம்பந்தப்பட்ட பகுதியில் கழிவுநீர் எதுவும் தேங்கவில்லை என்ற விபரம் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது. புகைப்படங்கள் இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**மனுதாரரின் மனு எதிர்மனுதாரான தேவதானப்பட்டி பேரூராட்சியின் செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்ட விபரங்கள் கண்டறியப்பட்டன.**

மனுதாரர் தனது புகார் மனுவில் தேவதானப்பட்டி பேரூராட்சியால் அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் வடிகால் பாதையானது சேதமடைந்து தனது நிலத்திற்கு செல்வதுடன் தனது நிலத்திற்கு அப்பால் உள்ள முருகன் கோவிலுக்கு மேற்குப்பக்கம் கழிவு நீர் வடிகால் பாதை அடைக்கப்பட்டு கழிவு நீர் தனது இடத்திற்குள் வருவதாகவும், இது குறித்து கள ஆய்வு செய்து சேதமடைந்துள்ள கழிவுநீர் வடிகால் பாதை சரிசெய்யுமாறும் மற்றும் அடைப்பட்டுள்ள கழிவுநீர் வடிகால் பாதையை தூர்வாரி முறையான கழிவு நீர் வடிகால் வசதி செய்து தருமாறு தேவதானப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலருக்கு மனு அளித்திருந்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்துள்ளார்.

பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் மேற்கண்ட கழிவுநீர் வடிகால் பேரூராட்சியால் ஆய்வு செய்யப்பட்டது. மனுதாரரின் வீட்டிலிருந்து வெளியேறும் கழிவு நீர் கால்வாய் மூலம் வெளியே சென்றுக் கொண்டிருந்தது. ஆனால் மனுதாரரின் பக்கத்து வீட்டில் உள்ளவரிடம் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக மேற்கண்ட வடிகால் செல்லும் பாதை பக்கத்து வீட்டில் உள்ளவரால் அடைக்கப்பட்டு மேற்கண்ட வடிகால்வாய் வழியாக கழிவு நீர் செல்லாமல்

தேங்கியிருந்தது. தற்போது மேற்கண்ட கால்வாயின் பாதையிலிருந்து அடைப்பு சரிசெய்யப்பட்டு கழிவு நீர் தங்கு தடையின்றி செல்வதை அறிய முடிகிறது,

**ஆய்வுக்குப் பின்னர் மனுதாரரின் மனு, தேவதானப்பட்டி பேரூராட்சியின் செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.**

மனுதாரர் தனக்கும், தனது அண்டை வீட்டாருக்கும் இடையே உள்ள பிரச்சனையில்தான் அண்டைவீட்டுக்காரர் அங்கிருந்த கழிவுநீர் வடிகால்வாய் பாதையை அடைத்து உள்ளார் என்கின்ற விவரத்தை மனுதாரர் தனது புகார் மனுவிலோ அல்லது தனது 7.12.2022 நாளிட்ட அறிக்கையிலோ இம்முறைமன்றத்திற்கு தெரிவிக்காததும் மேலும் உண்மைகளை மறைத்து தனக்கு சாதகமான கூற்றைமட்டும் இம்முறைமன்றத்திற்கு தெரிவித்துள்ளது கண்டிக்கத்தக்கது.

மேலும், தேவதானப்பட்டி பேரூராட்சியில் பொது சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் அளித்து கழிவுநீர் வடிகால் அமைப்புகள் முறையாக பராமரிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என தேவதானப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. R.சபரிநாதன்,,
79, ஜெயமங்கலம் ரோடு
ஆசிரியர் காலனி,
தேவதானப்பட்டி,தேனி மாவட்டம்.
2) செயல் அலுவலர்,
தேவதானப்பட்டி பேரூராட்சி
தேனி மாவட்டம்.
3) பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர்நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.
4) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம் ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக